லக்ஸ்மன் கதிர்காமர் சர்வதேச தொடர்புகளுக்கும், உபாய ஆய்வுகளுக்குமான நிறுவகத்தின் 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டின் செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பின் 154(6) உறுப்புரையின் பிரகாரம் என்னால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக முகாமைத்துவத்தினதும் ஆளுனர் தரப்பினரினதும் பொறுப்புக்கள்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் சகல கணக்காய்வு நடவடிக்கைகளும் மேற்கொள்கின்ற நிறுவனத்தால் அந்த நிறுவனம் தொடர்பாக வருடாந்த மற்றும் காலரீதியில் நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சுய வருமானம், செலவினம் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய பிரகாரம் பதிவேடுகள் மற்றும் அறிக்கைகள் பேணிச் செல்லப்படல் வேண்டும். அந்த சட்டத்தின் 16(2) இன் பிரகாரம் சகல கணக்காய்வு நடவடிக்கைகளும் மேற்கொள்கின்ற நிறுவனம் தொடர்பான வருடாந்த நிதிக்கூற்றுக்கள், விதிகளின் மூலம் காண்பிக்கின்ற வகையில் காலஎல்லையில் அந்த நிறுவனங்களின் வருடாந்த செயலாற்றல் அறிக்கையுடன் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அந்த சட்டத்தின் 38(1)(ஈ) பிரிவின் பிரகாரம் ஆண்டறிக்கை மற்றும் ஏனைய நிதிக்கூற்றுக்கள் தேவையான நேர காலத்தில் தயாரிப்பதை உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன், அதற்கு மேலதிகமாக கணக்காய்வு செய்யப்படுகின்ற நிறுவனத்திற்குரிய ஆண்டறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் கணக்காணித்துக் கொள்ளல் வேண்டும்.

## 1.3 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2021 நவம்பர் 16 ஆம் திகதிய 01/2021 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் மூலம் வெளியிடப்பட்ட பொது முயற்சிகளுக்கான செயற்பாட்டு வழிகாட்டியின் 6.6 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைவு ஆண்டறிக்கை என்பன கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2023 ஆம் ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் இந்த அறிக்கை திகதி வரையிலும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.4 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் நிலை

நிறுவனத்தால் இறுதியாக தயாரித்த 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானங்கள் மற்றும் செலவினங்கள் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| **நிதிக்கூற்றுக்களின் விடயங்கள்** | **பெறுமதி** |
|---|---|
| ------------------------------------ | ------------- |
| | ரூபா |
| <u>சொத்துக்கள்</u> | |
| நடைமுறையல்லா சொத்துக்கள் | 163,361,208 |
| நடைமுறைச் சொத்துக்கள் | 4,299,622 |
| | -------------- |
| **மொத்த சொத்துக்கள்** | **167,660,830** |
| | ======== |
| <u>உரிமை மூலதனம் மற்றும் பொறுப்புக்கள்</u> | |
| உரிமை மூலதனம் | 165,680,032 |
| பொறுப்புக்கள் | 1,980,798 |
| | --------------- |
| **மொத்த பொறுப்புக்கள்** | **167,660,830** |
| | ========= |
| மொத்த வருமானம் | 47,564,977 |
| மொத்த செலவினம் | 44,664,903 |
| | --------------- |
| **மிகை** | **2,900,074** |
| | ========= |

**2. கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**2.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

| | **சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடான தொடர்பு** | **இணங்காமைகள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரைகள்** | **பரிந்துரை** |
|---|---|---|---|---|
| (அ) | 2006 இன் 32 ஆம் இலக்க உபாயவழி ஆய்வு தொடர்பான இலங்கை நிறுவன சட்டம் (திருத்தப்பட்ட) | | | |
| (i) | 10 (அ) பிரிவு | நிறுவனத்தின் முகாமைத்துவ சபையினால் ஐந்து நபர்களை உள்ளடக்கிய சர்வதேச ஆலோசனை குழு ஒன்று நியக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறான ஆலோசனைக் குழு ஒன்று நியமிக்கப்பட்டிருக்க வில்லை. | சர்வதேச ஆலோசனைக் குழு நியமிப்பதற்காக 2023 நவம்பர் 17 ஆந் திகதி பணிப்பாளர் சபைக் கூட்டப்பத்திரம் ஒன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் | சட்டத்தின் பிரகாரம் சர்வதேச ஆலோசனைக் குழு நியமிக்கப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | பணிப்பாளர் சபை கூட்டத்திற்கு இது தொடர்பாக சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ii) | 10 உ (1) பிரிவு மற்றும் 10(2) பிரிவு | சட்டத்தை அமுல்படுத்துகின்ற திகதி அதாவது 2006 செப்தெம்பர் 29 ஆம் திகதி முதல் பண்டாரநாயக்க சர்வதேச தூதுவர் பயிற்சி நிறுவனம், இந்த நிறுவனத்திற்கு கையளிக்க வேண்டியிருந்ததுடன் அந்த நிறுவனத்தின் பிரிவு ஒன்றாக பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் மற்றும் ஏனைய கற்கை பாடநெறிகள் நடாத்தப்படல் வேண்டும். மேலும் அதன் சேவையில் ஈடுபட்டிருக்கின்ற உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களும், நிறுவனத்தின் உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களாக கருதப்படல் வேண்டும். எனினும் அந்தத் தேவை நிறைவேற்றப் பட்டிருக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டு வரை பயிற்சி நிறுவனம் பாடநெறிகளை நடாத்தி உழைக்கப்பட்ட பணத்தில் அதன் சகல செலவினங்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 2020 ஆம் ஆண்டில் இருந்து நிறுவனத்தின் வாடகை செலுத்துவதற்காக நிதியேற்பாடு ஒதுக்குவதற்கு அமைச்சின் கொள்கை ரீதியான தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் பயிற்சி நிறுவனம் மற்றும் அதன் பதவியணியினர் இந்த நிறுவனத்திற்கு கையேற்கப்படல் வேண்டும். |
| (iii) | 10 உ(2)(i) பிரிவு | சட்டத்தை அமுல்படுத்துகின்ற திகதிக்கு முன்னர் பண்டாரநாயக்க சர்வதேச தூதுவர் பயிற்சி நிறுவனத்தால் பேணிச் செல்லப்படுகின்ற ஏதாவதொரு கணக்கில் செலவு வைக்கப்பட்ட சகல பணமும் நிறுவனத்தின் நிதியத்திற்கு மாற்ற வேண்டியிருந்த போதிலும் | பயிற்சி நிறுவனம் பேணிச்செல்கின்ற கணக்குகளில் உள்ள நிதி நிறுவனத்தின் சுயமாக உழைக்கப்பட்ட உழைப்பாக இருந்தமையால் மற்றும் அதன் செலவினத்திற்காக அரசாங்கத்தின் நிதியேற்பாடு | சுட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் பயிற்சி நிறுவனத்தின் வங்கிக் கணக்கில் காணப்படுகின்ற மீதி கையேற்கப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கிடைக்காதிருந்தமையால் அந்த நிதியை ஏனைய கணக்கிற்கு மாற்றப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வில்லை. | |
| (ஆ) | 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 11 ஆம் பிரிவு | மிகை பணத்தை முதலீடு செய்யும் போது நிதி அமைச்சரின் இணக்கப்பாடு மற்றும் உரிய அமைச்சரின் அங்கீகாரம் பெறவேண்டி இருந்த போதிலும் அவ்வாறு அங்கீகாரம் பெறப்படாமல் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் நிறுவனத்தின் பயிற்சிப் பிரிவினால் 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் 10 நிலையான வைப்புக்களில் ரூபா 23,156,825 மற்றும் திறைசேரி உண்டியல்கள் ரூபா 2,923,679 முதலீடு செய்யப்பட்டிருந்தது. | இதன் பின்னர் மிகைப் பணம் முதலீடு செய்தவற்கு முடியுமான சந்தர்ப்பத்தின் போது வழங்கப்பட்டுள்ள ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும் என குறிப்பிடுகின்றோம். | மிகைப் பணத்தை முதலீடு செய்யும் போது நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேவையான அங்கீகாரம் பெறப்படல் வேண்டும். |
| (இ) | 2009 மே 26 ஆம் திகதிய இலக்கம் 39 என்ற முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் (01) பந்தி | கூட்டுத்தாபனம் மற்றும் நியதிச்சட்ட சபைகளுக்கு உரிய சட்டத்தின் மூலம் நிறுவனத்தின் பதவியணியினருக்கு சம்பளம் மற்றும் படிகளை தீர்மானிப்பதற்காக ஏற்பாடுகள் வழங்கப்பட்டிருந்த போதிலும் சம்பளம் மற்றும் ஆளணி குழு பரிந்துரை மற்றும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்துடன் விடயப் பொறுப்பு அமைச்சர் அல்லது பணிப்பாளர் சபையினால் அவ்வாறான | பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் அடிப்படையில் அமைச்சிற்கு நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்காக ஊக்குவிப்புப் படியாக மாதாந்தம் செலுத்தப்பட்டுள்ளதை ஏற்றுக் கொள்கின்றோம். ஆட்சேர்ப்பு நடைமுறைக்காக அங்கீகாரம் பெற்ற பின்னர் பதவியணியினரைச் சேர்ப்பதற்கு நடவடிக்கை | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் இன்றி படிகளை செலுத்தாதிருத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கொடுப்பனவுகளை வழங்குதல் அங்கீகரிப்பதை தவிர்த்தல் வேண்டும். எனினும் பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் அடிப்படையில் வெளிநாட்டு அமைச்சினால் நிறுவனத்திற்கு நியமிக்கப்பட்ட 04 உத்தியோகத்தர்களுக்காக கூட்டுமொத்தமாக ரூபா 785,000 மீளாய்வாண்டின் போது படியாக செலுத்தப்பட்டிருந்தது. | எடுக்கப்படும். | |
| (ஈ) | 2021 திசெம்பர் 16 ஆம் திகதிய இலக்கம் 01/2021 என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் மூலம் அறிமுகப் படுத்தப்பட்ட செயற்பாட்டு கைநூல் | | | |
| (i) | 3.2(i) பிரிவு | பதவியணியினரை சேர்க்கும் நடைமுறைகளுக்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற வேண்டியிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஆட்சேர்த்தல் நடைமுறை தயாரித்து அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. முகாமைத்து சேவைகள் திணைக்களம் ஆட்சேர்த்தல் நடைமுறைகளின் குறைபாடுகளை சரிசெய்து சமர்ப்பிக்குமாறு அறிவித்துள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் ஆட்சேர்ப்பு நடைமுறைகளுக்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்படல் வேண்டும். |
| (ii) | 6.6 ஆம் பிரிவு | ஆண்டறிக்கை நிதியாண்டு முடிவடைந்து ஐந்து மாதங்களுக்குள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க | 2007 முதல் 2015 வரை மற்றும் 2016 முதல் 2020 வரை ஆண்டறிக்கை | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் ஆண்டறிக்கை பாராளுமன்றத் |

| | | | |
|---|---|---|---|
| | வேண்டியிருந்த போதிலும் நிறுவனம் 2007 ஆம் ஆண்டு முதல் ஆண்டறிக்கையை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | 2024 யூலை 23 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் அந்த அறிக்கைகளின் குறைபாடுகளை மீண்டும் சரிசெய்து அனுப்புமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் அந்த அறிக்கைகள் கூடிய விரைவில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | தில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள | பரிந்துரை |
|---|---|---|
| 2023 ஆம் ஆண்டின் பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பொருட்பதிவேடுகளுக்கு கொண்டு வரப்பட்ட Laptop கணனிகளில் 16 மீதியாக இருக்க வேண்டிய போதிலும் உள்ளபடியான மீதி 15 ஆனமையால் ஒரு Laptop கணனி பற்றாக்குறையாகக் காணப்பட்டது. | 2018 ஆம் ஆண்டின் போது ஒரு Laptop கணனி இலங்கை இராணுவத்திற்கு வழங்கப்பட்டதாக அறிவிக்கப்பட்ட போதும் எழுத்துமூல சான்றுகளை கண்டறிய முடியாதுள்ளது என தயவுடன் அறியத்தருகின்றோம். | பொருள் பற்றாக்குறை தொடர்பாக நிதிப்பிரமாணம் 104 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |